7th March 1968]

தேவையற்ற பூச்சிகள், பறவைகள் முதலியவற்றையும் கொல்லுவதால் உணவு நெருக்கடி தீர்க்கப்படுகிறது என்று. ஆகவே வலங்கைமானில் ஏற்பட்ட நிலைமையைத் தமிழகத்தில் எல்லா இடங்களில் உண்டாக்க ஏற்பாடு செய்வார்களா ? பெரியகுளத்தில் எலிகளைக் கொல்லுவதற்கு ஒரு ஏற்பாடு செய்தார்கள். அதாவது எலிகளைப் பிடித்து க்கொன்று கொண்டு வந்து முனிசிபல் ஆபிஸில் போட்டால், 4 அணா என்று கொடுத்து விடுகிறார்கள். அந்த திட்டம் போல் இந்த மாநிலம் பூராவும் போட்டு எலிகளை ஒழிக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பத்திரிகையில் படித்த செய்தியைப் போல் மத்திய அமைச்சர் ஒருவர் எலிகளைச் சாப்பிட்டால் உணவு பிரச்னை தீருமென்றும் அறிவித்திருக்கிறார். அதையும் அங்கத்தினர் படித்திருப்பார் என்று கருதுகிறேன். பெரிய குளத்தில் எலிகளை தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போதும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். "சிங்க் பாஸ்பேட்" போன்றவற்றை 35 பர் செண்ட் மானியமாக கொடுக்கிறோம். எலிப்பொறிகளை வழங்குகிறோம்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் : இன்னும் எத்தனை எலிகள் பாக்கியிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எலிகள் பூராவும் அழிக்கப் படவில்லை. எலிகளின் தொல்லை இருந்து கொண்டுதான் இருக்கிறது. பாம்புகள் எல்லாம் கொல்லப்பட்டதின் விளைவாக எலிகள் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, பாம்புகளை அகற்றியதால் தான் இந்த எலிப் பெருக்கம் அதிகமாகிவிட்டது. நீர் பாம்பு விஷப் பாம்பு அல்ல. அந்தப் பாம்பைத் தோலுக்காகப் பிடித்து விடுகிறார்கள். ஆகவே பாம்பு பிடிப்பதை ஒரு தடையாகப் போட்டு, அதிகமாகப் பாம்பை நாட்டில் நடமாடவிட்டால், நிச்சயமாக எலிகள் ஒழிந்துவிடும். தண்ணீர்ப் பாம்பு விஷமில்லாததாகும். ஆகவே இதில் முயற்சி எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கேள்வி சிரிப்பிற்கு உரியதல்ல. முற்றிலும் உண்மை. பாம்பின் தோல் நல்ல விலைக்கு விற்கிறபடியால் அதைப்பிடித்து தோலை உரித்து விற்று விடுகிறார்கள். இந்தக் குறிப்பிட்ட பாம்பு விஷத்தன்மை உடையதல்ல. அதனால் பொது மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் கிடையாது. ஆகவே அதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மத்திய அமைச்சர் எலிகளைத் தின்னலாம் என்று சொல்லவில்லை என்று பலமுறை கூறி விட்டார். அது இந்த அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் பத்திரிகையில் படித்த மாதிரிதான் நானும் படித்துப் பார்த்தேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வட தேசங்களில் எலியை உணவு பொருளாக சாப்பிடுபவர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இங்கே லட்சக் கணக்கில் எலிகள் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆகவே இவற்றை எல்லாம் வீணாக்காமல் வடதேசங்களில் உள்ளவர்கள் சாப்பிடுவதற்கு அனுப்பு வதற்கு அரசாங்கம் தக்க முயற்சிகள் எடுப்பார்களா ?

Concessions to Christian Converts.

*201. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the concessions allowed to backward communities hitherto and extended to the Christian converts from backward community have been cancelled by the Government ; and

(*b*) the reasons therefor ?

[7th March 1968

கிருஸ்துவ மதத்தில் சேர்ந்தவர்களுக்குச் சலுகைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் பின்தங்கிய வகுப்பினர் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்திருப்பினும், பின்தங்கியவர்களுக்கு கொடுத்துவந்த சலுகையை இவர்களுக்கும் கொடுத்துவந்ததை தமிழக அரசு ரத்து செய்து விட்டதா ?

(இ) காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) பின்தங்கிய வகுப்பினர்களுக்கு ஹரிஜன இலாக்காவால் கொடுத்து வந்த சலுகைகள், கிறிஸ்துவ மதத்தைத் சேர்ந்த பின்தங்கிய வகுப்பினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகையால் அச்சலுகைகளை ரத்து செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஹரிஜனங்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தால் சலுகை கொடுக்கப்படுகிறதா ? சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் போன்ற பின் தங்கிய வகுப்பினர்களுக்கு அந்த சலுகை கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜனங்கள் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்திருப்பவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. ஏனைய சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்படவில்லை.

திரு. எம். எத்திராஜுலு : ஹரிஜனங்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்த பிறகு ஹரிஜன சலுகை கொடுக்கப்படுகிறதா ? அல்லது பின்தங்கிய வகுப்பினருக்குக் கொடுக்கும் சலுகை கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹரிஜனங்களுக்குத்தான் அந்த சலுகை. சில குறிப்பிட்ட பின் தங்கிய வகுப்பினர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. மதம் மாற்றம் செய்தால் சமுதாயத்தில் உள்ள இழிவு தன்மை நீங்கப்பட்டதாகக் கருதப்பட்டு இந்த சலுகை குறைத்துத் தரப்பட்டு வந்திருக்கிறது.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, இந்தக் கொள்கை மிக பழங்காலத்திலிருந்து பின்பற்றி வந்த கொள்கையாகும். மதத்திற்கு தனிப்பட்ட முக்கியத்துவம் இந்த அரசாங்கத்தில் இல்லை என்ற முடிவிற்கு இந்த அரசாங்கம் வந்ததால், வருமானத்தின் அடிப்படையில் நாம் கொடுக்கிற இந்த உதவி மானியத்தை கொடுப்பது பற்றி இந்த அரசாங்கம் தீவிரமாக சிந்திக்குமா ?

மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து: மதம் மாறிய பிறகும் அவர்கள் நிலைமை இன்னும் உயரவில்லை, சமுதாய அடிப்படையில் உயரவில்லை என்பதற்காக முற்றிலும் ஹரிஜன சலுகை தரவேண்டுமென்று ஹரிஜன சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் நிலைமை மத மாறிய பிறகும் மாறாத காரணத்தால் மாறுகிற வரையிலும் இந்த சலுகை தரவேண்டுமென்று இந்த சர்க்கார் கருதுகிறது. மதச்சார்பற்ற அரசாங்கம் என்பதை முன்னால் இருந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைத்தான் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த அரசாங்கம் புதிய வழியில் செல்லவில்லை.

திரு. எம். எத்திராஜுலு : சலவைத் தொழிலாளர்கள் மிகப் பின் தங்கிய பகுதியின் பிரிவில் இருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பிறகும் இதே தொழிலைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களுக்குரிய சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் தனிப்பட்ட ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற சலுகை தரப்படவேண்டுமென்ற முடிவுக்கு வந்து, ஹிந்து சமுதாயத்தில் இருக்கிற பலவேறுபட்ட பிரிவுகளில் இவர்கள் தாழ்வாகக் கருதப்பட்டு, இவர்களை அனைவரோடும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டிருந்த காரணத்தால், அவர்களுக்குத் தனிச் சலுகை தரப்பட்டது. மதம் மாறிய பிறகு அவர்களுக்கு ஏற்றம் குறையும், முற்போக்காளர்களாகக் கருதப்படுவார்கள். உதாரணமாக ஆண்டி என்ற ஹிந்து, மதம் மாறிய பிறகு கிறிஸ்துவ மதத்தில் ஆண்டர்சன் என்று கருதப்படுவார். மற்ற சலவைத் தொழிலாளிகள் அல்லது வேறு யாரும் இப்படிப்பட்ட சமுதாய இழிவுத் தன்மை உடையவர்ளாக கருதப் படவில்லை. எனவே தரப்படுகிற முழு சலுகையும் இவர்களுக்குக் கொடுக்க படவில்லை. ஹரிஜன மக்களுக்கு மதம் மாறிய பிறகு தனியாகச் சலுகை கொடுக்கப்படுகிறது.

திரு. கே. ராஜாராம் : ஹரிஜன மக்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பிறகு இதற்கு முன்னால் சலுகை இல்லாமல் இருந்து 4, 5 வருடங்களுக்கு முன்னால் பிற்பட்ட வகுப்பினருக்குள்ள சலுகை அவர்களுக்கும் கொடுக்க உத்தரவு போடப்பட்டது. சலவைத் தொழிலாளர்கள், நாவிதர்கள் எல்லாம் ஏற்கனவே அந்த சலுகைகளை அடைந்து கொண்டு இருப்பதால் அவர்களுக்கு வேண்டியதில்லை. அந்தச் சலுகை ஏற்கனவேயே இருக்கிறது. ஆகவே ஹரிஜன மக்களுக்குப் புதிதாக பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் மூலம் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இங்கே கேட்ட கேள்வி மிகவும் பின் தங்கிய வகுப்பினர்கள் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி இருப்பார்களானால் அவர்களுக்கு தரப்படுமா என்பது தான். எனவே மிகவும் பின் தங்கியவர்கள் கிறிஸ்துவ மதத்தை தழுவி இருப்பார்களானால் அவர்களுக்கு எந்த விதமான சலுகையும் தரப்படவில்லை என்பதைத்தான் சொன்னேன். ஆனால் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது குறிப்பாகக் கல்வி சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. பொருளாதார ஏற்றம் பெறும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை.

Registration of Deeds.

* 202. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that many of the persons who go for registration of deeds to Sathur in Ramanathapuram district return without registering them ; and

(*b*) if so, the reasons therefor ?

பத்திரப் பதிவு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்ட சாத்தூரில் பத்திரப் பதிவுக்கு வருபவர்கள் பாதிப்பேருக்குமேல் தினமும் பத்திரப்பதிவு செய்ய இயலாமல் திரும்பிச் செல்வது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) விவர அறிக்கை ஒன்று பேரவையின் முன்பு வைக்கப்படும். 1967 ஜூலைத் திங்கள் முதல் அக்டோபர் திங்கள் வரை கொண்டுவரப்பட்ட பத்திரங்கள் அனைத்தையும் அந்தந்த நாளிலேயே பதிவு செய்ய முடியவில்லையென்பது உண்மை. ஜூலை முதல் அக்டோபர் வரையுள்ள கால அளவில் சாத்தூரில் ஏராளமான பத்திரங்கள் பதிவு செய்யப்படுவதற்காகக் கொண்டுவரப்படுவது இயல்பு. ஒவ